
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12 ஜனவரி -1999 இதழ் - 1



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701
தமிழ்நாடு, இந்தியா.

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. **E.Z. செல்வநாயகம்** அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து **"ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்"** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள **இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.**

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 25/– மாத்திரமே.

முகவரி : **தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே


1. தவிர்த்திருக்க முடியும் — 1
2. பட்டமளிப்பு விழா அழைப்பிதழ் — 9
3. கர்த்தரின் பந்தி கொடுப்பது எப்படி — 10
4. அவர்கள் எப்படி இரட்சிக்கப்பட்டார்கள்? — 15
5. தண்ணீரைத் தேடும் மான்கள்... — 20
6. தெரிந்து கொள்ளுங்கள் — 22
7. மல்கியா தீர்க்கனின் புத்தகம் — 27
8. மரணத்திலும் மகிமையைக் கண்டவன் — 28
9. கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்? — 31

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C.CHOATE**

**Published by Church of Christ**
**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 12** **JANUARY -1999** **Issue -1**

### ஆசிரியவுரை

## "தவிர்த்திருக்க முடியும்"

மனிதர்களாகிய நாம், இப்பூமியில் சிறப்பான வாழ்வு வாழ்வதற்குத் தேவையான அறிவும், ஆற்றலும் பரலோகத்தின் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதை நாம் முறையாகவும், முழுமையாகவும் பயன்படுத்தாதபோது, பல சமயங்களில் பிரச்சினைகளையும், தோல்விகளையும், சங்கடங்களையும், வேதனைகளையும், துக்கங்களையும் எதிர்கொள்ள வேண்டியதாகி விடுகிறது. ஏன் இப்படியாயிற்று என்று அதற்கான காரணங்களை நாம் ஆற அமர்ந்து யோசித்துப் பார்க்கும் போது, ஒருவேளை நாம் அதைத் தவிர்த்திருக்கலாமோ அல்லது இதைத் தவிர்த்திருக்கலாமோ என்று சில நேரங்களில் எண்ணத் தோன்றுகிறது. இன்னும், சில சந்தர்ப்பங்களில், நாம் புத்தியாக நடந்திருந்தால் அந்த சோகத்தை, அல்லது அந்த நஷ்டத்தை கண்டிப்பாகத் தவிர்த்திருக்கலாமோ என்று அங்கலாய்க்கவும் செய்கிறோம். இப்படி நான் சிந்திக்கும்படியான நிலை என் வாழ்க்கையில் ஒருபோதும் வந்ததே கிடையாது என்று எந்த ஒரு மனிதனுமே சொல்ல முடியாதென்பதே உண்மை.

நம்முடைய செயல்பாடுகளை சீர்தூக்கிப் பார்த்து, அடடா, அதைத் தவிர்த்திருக்கலாமே என்று எண்ணுவதைப் போலவே, நாம் மற்றவர்களின் காரியங்களையும் அதன் தன்மைக்கேற்றவாறு அணுகி, அவர்கள் அதைச்

செய்திருக்கலாம் அல்லது தவிர்த்திருக்கலாம் என்று கூறமுடியும். இதைச் செய்ய ஒருவனுக்கு ஒரு பெரிய மேதாவித்தனம் தேவையில்லை. பிரச்சினையின் தன்மையையும், அதன் ஆழத்தையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் புரிந்து கொள்ளும் குறைந்தபட்ச அறிவிருந்தால் அதுவே போதுமானது.

இக்கருத்தினடிப்படையில் தான், நாம் ஒரு வாலிபனுடைய செயல்பாட்டை உற்றுப்பார்த்து, தீர்ப்புச் செய்ய உள்ளோம். அவன், பரிசுத்த வேதாகமத்தால் சிறப்பான அறிமுகம் பெறும் அளவுக்கு சிலாக்கியமானவன். மனத்தாழ்மையும், நெஞ்சுரமும் கொண்டவன். நல்லதைச் செய்ய வேண்டுமென்ற நினைப்பும், சிறந்ததைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற வாஞ்சையுள்ளவன். எதை யாரிடம் கேட்க வேண்டுமென்ற தெளிவு கொண்டவன். சிறுவயது முதலே ஒழுக்க நெறியிலும், பக்தி முறையிலும் வளர்ந்தவன். எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசுக் கிறிஸ்துவை முகமுகமாய்ச் சந்தித்துப் பேசும் பாக்கியம் பெற்றவன்.

இவ்வளவு சாதகமான அம்சங்கள் இவனுக்கிருந்தும், இவன் தனது வாழ்க்கையின் ஒரு கட்டத்தில், “மனமடிந்து, துக்கப்பட்டிருக்கிறான்”. ஆனால், இவன் காரியங்களை நாம் உற்று நோக்கும் போது, இவன் அடைந்த துக்கத்தை கண்டிப்பாகத் “தவிர்த்திருக்க முடியும்” என்று நமக்கு பலமாகத் தோன்றுகிறது. நாம் இப்படி, முடிவு செய்வது சரி தான் என்பதற்கு ஆதாரமாக, இவனுக்கிருந்த சாதக நிலைகளை சற்று ஆராய்வோம்.

முதலில், இவன் பற்றி வரும் வேத பகுதியை நாம் பார்ப்போம். “பின்பு அவர் புறப்பட்டு வழியிலே போகையில், ஒருவன் ஓடிவந்து, அவருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, நல்ல போதகரே, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான்.

அதற்கு இயேசு : நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே.

விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார்.

அதற்கு அவன் போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக் கொண்டிருக்கிறேன் என்றான்.

இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்பு கூர்ந்து : உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு : நீ போய் உனக்கு

உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றி வா என்றார்.

அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்த படியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான். (மாற். 10 : 17 22).

இப்பொழுது, அவனுக்கிருந்த சாதக நிலைகளைப் பார்ப்போம்.

## I. இயேசுவண்டை ஓடி வந்தான் :

முதலாவது, இந்தச் சம்பவம் இயேசுவின் ஊழிய நாட்களில் நடந்துள்ளது. அந்நாட்களில் அவர் மிகுந்த செல்வாக்குடன் காணப்பட்டார் என்பது நாமறிந்ததே. எப்பொழுதும், அவரைச் சுற்றி பெருங்கூட்டம் அலை மோதியது. ஆகவே, அச்சமயங்களில் அவர் கிட்டச் சேர்ந்து, அவரோடு பேச முயற்சிப்பது வீண் வேலை என்பது விளங்காததல்ல. அதுவும், அவர் புறப்பட்டுப் போகையில் என்று வசனம் கூறுகிறபடியால், அது இன்னும் சிரமமான காரியம். ஒருவேளை, ஓரிடத்தில் தங்கியிருக்கும் போதாகிலும் முயற்சித்துப் பார்க்கலாம். ஆனால், பிரயாணத்தில்? வாய்ப்புகள் மிகமிகக் குறைவு. ஆயினும், அவன் இயேசுவண்டை ஓடிவந்து, பேசியுள்ளதாக வேதம் கூறுகிறது.

அம்மனிதனின் இச்செயல், அவனுடைய உள்ளக் கிடக்கையை பளிச்சென வெளிப்படுத்துகிறது. அவன் வாஞ்சை வரம்பில்லாதது என்று காட்டுகிறது. அவனின் இச்செயல் மெச்சக்கூடியதாகவே உள்ளது.

நம்முடைய சமுதாயத்தில் உள்ள அநேகர் கிறிஸ்துவண்டை வர மறுக்கும் போது, வரத் தயங்கும் போது, வந்தவர்களும் கிறிஸ்துவை விட்டு ஓடும் போது, இவன் கிறிஸ்துவை நோக்கி ஓடி வந்துள்ளான். கிறிஸ்துவண்டை வந்து, தங்களுடைய சரீர வாழ்க்கையின் அநேக தேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவல நிலையிலுள்ளவர்களே, வரப் பிடிவாதமாக மறுக்கும் போது, பூமியின் வாழ்க்கையில் சகலவற்றிலும் தன்னிறைவு பெற்று, சம்பூரண வாழ்க்கை வாழ்ந்த அவன் ஓடி வந்துள்ளான்.

ஆயினும், ஆவலோடு ஓடி வந்த இவன், இறுதியில் துக்கத்தோடே திரும்பிப் போனதைப் பார்க்கும் போது, துக்கத்தை அவன் தவிர்த்திருக்க முடியும் என்றே தோன்றுகிறது.

## II. மனத்தாழ்மையோடு தைரியத்தையும் காட்டினான்

திரளான கூட்டம் முண்டியடித்த போதும், தனது முயற்சியில் தொய்வுகாட்டாமல், ஓடோடி வந்த இவன், இயேசுவுக்கு முன்பாக முழங்கால் படியிட்டுள்ளான். இவன், அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டது, இயேசுவின் மீது இவனுக்கிருந்த உயர்ந்த மரியாதையை மாத்திரம் காட்டாமல், இவனின் மிகுந்த மனத்தாழ்மையையும் எடுத்துக் காட்டுகிறது. இவனின் முடங்கின முழங்கால், இன்னொன்றையும் கூறுகிறது: அவர், மரியாதைக்கு மாத்திரமல்ல, வணங்குவதற்கும் ஏற்றவர் என்பதை. அன்றைய நாளில் இவ்வுண்மை எத்தனை பேருக்குத் தெரிந்திருந்தது?

இவன், அச்சமுதாயத்தின் பெரும் பணக்காரனாக இருந்துள்ளான். அத்தோடு, ஒரு தலைவனாகவும் இருந்துள்ளான் என்று லூக்கா ஆசிரியர் கூறுகிறார். (லூக். 18 : 18). அதாவது, நிறைந்த வசதியோடு, அதிகாரமும் இவன் கையில் இருந்துள்ளது. ஒருவேளை, அன்றைய நாளில், இயேசுவைச் சுற்றியிருந்த ஏராளமான பேர்களில், அநேகர் இவனைக் காட்டிலும், பல காரியங்களில் தாழ்ந்தவர்களாக இருந்திருப்பர். இவனுடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவர்களாக இருந்திருப்பர். ஆனால், இவன் அதுபற்றியெல்லாம் கிஞ்சித்தும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

யூதருக்குள் அதிகாரியாக இருந்த நிக்கொதேமு, பகலிலே இயேசுவைச் சந்திக்கப் பயந்து, இரவிலே வந்திருக்கும் போது (யோவா. 3:1,2) இவன் பட்டப்பகலில், நடுரோட்டில் முழங்காலிட்டு சந்தித்துள்ளான். இதற்கு தாழ்மையோடு, அபாரத் துணிவும் வேண்டும். தலைவன் என்ற தன்னுடைய அந்தஸ்துக்கு குந்தகம் ஏற்பட்டு விடுமென்று, இவன் ஒரு கணம் சிந்தித்திருந்தால், இவனால் இப்படிச் செய்திருக்க முடியாது.

இன்றைக்கு எத்தனையோ மக்கள், தாங்கள் எதிலுமே குறிப்பிடத்தக்கவர்களாக இல்லாதிருந்தும், தங்களுடைய தேவையில்லாத கௌரவத்தையும், வீண் பெருமைகளையும் கொஞ்சமும் தளர்த்துவதில்லை. ஒருவேளை, தாங்கள் பணிபுரியும் இடங்களில், தங்களது வருமானம் போய் விடுமே என்பதற்காக பணிந்து நடப்பது போல பாசாங்கு செய்தாலும், தேவனுடைய வேலையைச் செய்கிறவர்களென்று வரும்போது, அவர்களை முடிந்தவரை உதாசீனம் செய்து, அதில் ஒருவகையான இன்பம் காண விரும்புகின்றனர். ஆனால், இந்தப் பெயர் தெரியாத வாலிபனோ, முற்றிலும் வேறுபட்டவனாக காட்சி தருகிறான்.

இந்தளவு, நற்குணம் இருந்தும், அவன் தன் முயற்சியில் தோற்றுப் போய், துக்கத்துடனே திரும்பினதைப் பார்க்கும் போது, இவன் அடைந்த துக்கத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்றே தோன்றுகிறது.

## III. அவன் பகுத்தறிவுள்ளவனாக இருந்தான்

அறிவு என்பது, கிட்டத்தட்ட எல்லா மனிதருக்குள்ளும் கொஞ்சம் கூடக் குறைய இருந்தாலும், பகுத்தறியும் அறிவு எல்லோரிடமும் தேவையான அளவு இருப்பதில்லை. ஆனால், இந்த வாலிபன் ஓடி வந்து, முழங்காலிட்டு சொன்ன வார்த்தைகள் நல்ல போதகரே என்பது. நல்லவர் என்று ஒருவரை, யாருமே எடுத்த எடுப்பில் சொல்லமாட்டார்கள். கணிசமான கால கவனிப்பிற்குப் பிறகோ அல்லது பல நாள் பழக்கத்திற்குப் பின்போ தான் இவ்வார்த்தையைப் பயன்படுத்த முடியும்.

இயேசுவின் நாட்களில், யூத மதப் போதகர்கள் அநேகர், பக்தியின் வேஷம் தரித்து, தங்களுடைய போதனை தான் உண்மையானதென்று ஊரெல்லாம் உலா வந்து, போதகம் செய்து கொண்டிருந்தும், இவனும் அவர்களைப் போல ஒரு முக்கியப் புள்ளியாக இருந்து, அவர்களின் போதனைகளுக்கு வக்காலத்து வாங்க வேண்டிய அவசியம் இருந்தும் கூட, அவைகளையெல்லாம் புறந்தள்ளி, இயேசுவின் போதனைகளோடு அவைகள் ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்பதை மனப்பூர்வமாக அறிந்து வைத்திருந்தான். இதைச் செய்வதற்கு ஒருவனுக்குப் பகுத்தறியும் தன்மை அபாரமாக இருந்திருக்க வேண்டும்.

நாம், கிறிஸ்தவ மத உலகைக் கவனிக்கும் போது, இந்தப் பகுத்தறிவுக்கு கடுமையான பஞ்சம் ஏற்பட்டுள்ளதென்பதை போகிற போக்கில் அறிந்து கொள்ள முடியும். அப்போஸ்தலனாகிய யூதா எழுதின நிருபத்தில், தேவனுடைய பிள்ளைகள் பகுத்தறிவுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார். (யூதா. 22) ஆனால், கிறிஸ்தவமோ, பகுத்தறிவுக்கு நிரந்தரமான விடை கொடுத்துவிட்டு, தேவன் பெயரால் யார் என்ன சொன்னாலும், அதற்கு கண்ணை மூடிக் கொண்டு, ஆமாம் சாமி போடுவதுதான், பக்திக்கு அடையாளம் என்று புது விளக்கம் கொடுக்கின்றது. இன்னும், முதியோரின் பேச்சுக்கு மரியாதை என்ற பெயரால், பெற்றோரும், மற்றோரும் சொல்வது தான் வேதவாக்கு என்று அநேக வாலிபர்கள், ஆன்மீக காரியங்களின் ஆழத்தை உணராமல், நாட்களை வீணடித்துக் கொண்டுள்ளனர். தங்களுடைய உலக அறிவை ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்துவது பாவம் என்று நினைக்கின்றனர். ஒருவேளை உண்மையைக் கண்டுபிடிக்க முயற்சித்து,

அதன் விளைவாக, தேவ கோபத்திற்கு ஆளாகி விடுவோமோ என்று அஞ்சி நடுங்குகின்றனர். ஆனால், இந்த வாலிபன், இவ்விஷயத்திலும் வேறுபட்ட்வனாகவே இருந்துள்ளான்.

இவ்வளவு இருந்தும், தன் முயற்சியில், பரிதாபமான தோல்வியைச் சந்தித்து, துக்கத்தோடு திரும்பிப் போனதைப் பார்க்கும்போது அத்துக்கத்தை தவிர்த்திருக்க முடியும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

## III. ஆவிக்குரிய சிந்தையையும் பெற்றிருந்தான்

இறுதியாக, இவனுக்குள்ளிருந்த மற்ற எல்லா சிறப்புகளையும் விடச் சிறந்ததொரு சிறப்பும் இவனிடம் இருந்தது. இக்குணம் பூமியின் வாழ்க்கையில் அரிதான ஒன்று. இவன் மிகுந்த செல்வந்தனாயிருந்து, தனது செல்வத்துக்கடுத்த காரியங்களில் நாட்டம் கொள்ள காரணங்கள் ஆயிரம் இருந்தும், அவைகளுக்கு மத்தியிலும், இவனுக்கு ஆவிக்குரிய சிந்தையும், ஆத்துமாவைக் குறித்த பாரமும், நித்திய ஜீவனைப் பற்றி அக்கறையும் இருந்துள்ளது. இவனொரு, அசாதாரணமானவனே.

இவன் இயேசுவிடம் கேட்ட கேள்வி இது தான். நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்? என்று (10 : 17) . இவன் இயேசுவண்டை ஓடி வந்த போது, திரளான கூட்டம் அவரை நெருக்கி நின்றது. ஆனால், அவர்களனைவரும் பூமியின் பாடுகள் சம்பந்தப்பட்ட விதவிதமான நோக்கங்களுக்காக அவரிடம் வந்திருந்தனர். வியாதியின் கொடுமைக்காகவும், பிசாசின் கட்டுகளுக்காகவும், இன்னும் பிற காரியங்களுக்காகவும் வந்திருந்தனர். ஆனால் இந்த வாலிபனோ, பூமியில் பிறந்த எல்லோரும் கட்டாயம் கேட்க வேண்டிய, ஒரு அர்த்தமுள்ள கேள்விக்காக இயேசுவிடம் வந்தான். இம்மையைப் பற்றியே அனைவரும் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், இவன் ஒருவன் மாத்திரம், மறுமையைக் குறித்த கவலையோடு வந்தான். எவ்வளவு, விசேஷமான, மனிதனாக இருந்துள்ளான் பாருங்கள்.

நம்முடைய நாட்களிலிருக்கும் சமுதாயத்தை அப்படியே கவனித்துப் பார்த்தால், அதுவும் குறிப்பாக வாலிப சமுதாயத்தைக் கண்ணோக்கினால், நாம் பார்த்த இந்த வாலிபனைப் போல், ஒருவனையாகிலும் கண்டுபிடிக்க முடியுமா? மாம்ச காரியங்களே பெரிதென்று மதி மயங்கித் திரிகின்றனர். அதுவும், செல்வமும், சமுதாய அந்தஸ்தும் ஒரு சேர இருந்துவிட்டால், சொல்லவே வேண்டாம். ஆன்மீகமா? அது ரூபாய்க்கு எத்தனை என்று கேட்பார்கள். ஆனால், இந்த வாலிபன், முற்றிலும், ஆம், முற்றிலும்

வேறுபட்டவனாக இருந்துள்ளான்.

ஆனாலும், இவன் துக்கமடைந்தவனாகத் திரும்பிப் போனான் என்று கேள்விப்படும் போது, நமக்கே மிகுந்த துக்கம் ஏற்படுகிறது. இவன், கண்டிப்பாக, தனது துக்கத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இதுவரை நாம் கண்ட இந்த வாலிபனுடைய நற்குணங்களை பார்க்கும்போது, இவன் இயேசுவிடம், நீர் சொல்வதையெல்லாம் உடனே செய்கிறேன் ஆண்டவரே என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால், இவனோ, துக்கத்தோடே திரும்பிப் போயுள்ளான். ஒருவேளை, IIகொரி. 7 : 9 ல் சொல்லியுள்ளது போல், இவன் துக்கம் மனந்திரும்புவதற்கேதுவான துக்கமாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால், இவனுடையதோ, வேறு வகையானது.

இருப்பினும், இந்த வாலிபனுடைய குணங்களை மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது, ஆகா, இவனல்லவா பக்தன் என்று சொல்லும்படியாகவே இருக்கிறது.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நாம் பார்த்த இந்த வாலிபன், கிறிஸ்தவ உலகின் இன்றைய நிலையை அப்படியே பிரதிபலிப்பவனாக உள்ளான். பலர், அநேக நற்குணங்களோடு, இயேசுவண்டை வருகின்றனர். ஆயினும், நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு, நீங்கள் இதைச் செய்ய வேண்டுமென்று சொல்லும் போது, தங்களுக்கு லாபமாக இருக்கும் பல உலக காரியங்களினிமித்தம் சத்தமில்லாமல் திரும்பிப் போய் விடுகின்றனர்.

இந்த வாலிபனுக்கு செல்வம் ஒரு காரணமாக இருந்தது போல, அநேகருக்கு பதவி, பட்டம், புகழ், பாரம்பரியம், சமுதாய அந்தஸ்து, கல்வி, வேலை, வருமானம் போன்ற பல காரியங்கள் காரணங்களாக உள்ளன. இருப்பினும், அந்த வாலிபன் போலவே, நம்முடைய உண்மை ரூபத்தை மறைத்து, பக்தியின் வேஷம் போட்டு சமுதாயத்தை கடைசி வரை, ஏமாற்றி வருகிறோம். வெளியே பார்த்தால், ஆகா, இவரா, எவ்வளவு ஆர்வம்! எவ்வளவு வாஞ்சை! என்ன தாகம்! என்ன தாழ்மை! எவ்வளவு பக்தி என்று சொல்வதைப் போல் வெளித் தோற்றம் உள்ளது.

ஆனால், அவர்களைச் சந்தித்து, அய்யா, அம்மா, நீங்கள் நீத்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வதற்கு இன்னன்னதைச் செய்ய வேண்டுமென வேதவசனம் கூறுகிறதென்று சொல்லும்போது தான்,

அவர்கள் யாரென்று தெரிகிறது. இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் தான் இயேசுக்கிறிஸ்து இப்பூமிக்கு வந்தார் என்பதின் பொருள் என்னவென்று கூட அநேகருக்கு விளங்குவதில்லை. (லூக். 19 : 10). அப்படிப்பட்டவர்களையெல்லாம் அணுகி, நீங்கள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள, இயேசு கட்டின அந்த ஒரு சபையை (மத். 16 : 18) அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்றும், நீங்கள் விசுவாசித்து (மாற். 16 : 16) அறிக்கையிட்டு (ரோம. 10 : 9, 10), பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் (அப். 22 : 16) பெற வேண்டும் அப்பொழுது தான் இயேசு கட்டின அந்த ஒரு சபைக்குள், நீங்கள் சேர்க்கப்படுவீர்கள், அது தான் உங்கள் நித்தியத்தை உறுதி செய்யும் என்று சொல்லும்போது, அநேகர், அந்த வாலிபனைப் போலவே துக்கப்படுகின்றனர். சில நேரங்களில் கோபப்படவும் செய்கின்றனர். துக்கமோ, கோபமோ எதுவாக இருந்தாலும், அவை கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டியவைகளே.

அந்த வாலிபன் நிலையைப் போல் நம்முடைய நிலை இருக்க வேண்டாம். அவன் முழங்காலை மடக்கினது நல்லது தான். ஆனால், அவன் தனது மனவிருப்பத்தை மடக்க விரும்பவில்லை. ஆகவே, பயனில்லாமல் போனது. அவன், இயேசுவை வணங்க தனது தலையை பக்தியோடு தாழ்த்தினான். ஆனால், தனது இருதயத்தின் நிலையைத் தாழ்த்தவில்லை. நம்மைப் போலவே நேரிடையாக இல்லாமல், மறைமுகமாக அவர் சித்தத்தை ஒதுக்கித் தள்ளினான். பயப்படுவது போல் பாவ்லா காட்டினானேயொழிய, கீழ்ப்படிய முற்றிலும் மறுத்துவிட்டான். பூமிக்குண்டானவைகளை விட்டுவிடாமலே, பரலோக காரியங்களுக்கு ஆசைப்பட்டான். இந்த ஜீவனுக்குண்டானவைகளை தூக்கியெறியாமல் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினான். அது முடியுமா? சொல்லுங்கள். ஒரு போதும் முடியாது. நாம் தேவனை ஏமாற்றவே முடியாது.

ஆகவே, அருமையானவர்களே, இந்த புதிய ஆண்டுக்குள்ளாக பிரவேசித்திருக்கிற நாம், நமது ஆன்மீக வாழ்வில், வேடதாரிகளாக வாழ விரும்பாமல், தவிர்க்கப்பட வேண்டிய காரியங்களை சரியான நேரத்தில், தவிர்த்து, கீழ்ப்படிய வேண்டிய காரியங்களுக்கு எந்த தயக்கமுமில்லாமல், தைரியமாய் கீழ்ப்படிந்து, இயேசுவின் போதனைகளின்படியாய் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வோமாக! ஆமென்.

**S. ராஜநாயகம்.**

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

உலக வீடியோ வேதாகமக் கல்லூரியின்

# இரண்டாவது பட்டமளிப்பு விழா

## அழைப்பிதழ்

நேரம் : காலை 9 : 30 மணி

நாள் : 6 - 2 - 1999 - சனிக்கிழமை

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

**சிறப்புச் செய்தி**

சகோ. சார்லஸ் டீ பால்மா U.S.A,
Bro. CHARLES DI PALMA

சகோ. சக் மைசின் ஹீமர் U.S.A,
Bro. CHUCK MISENHEIMER

சகோ. ஸ்டேன் குரோலி U.S.A,
Bro. STAN CROWLEY

**நற்செய்திக் கூட்டங்கள்**

நேரம் : மாலை 6 : 30 மணி

நாள் : பிப்ரவரி 6, 7 - 1999 - சனி, ஞாயிறு

இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்,
தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

தொடர்பு முகவரி : கிறிஸ்துவின் சபை, த.பெ. எண் 27, காங்கேயம்.
போன் 04257-20030.

# கர்த்தரின் பந்தி கொடுப்பது எப்படி?

நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையைத் தொடங்குவது எப்படி என்ற தலைப்பின் கீழாக தொடர் பாடங்களைப் படித்து வருகிறோம். இதைச் செய்வதற்கு நீங்கள் கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக இருப்பது அவசியம் என்பதை உணர வேண்டும். நீங்கள் அப்படியில்லாதிருந்தால், நீங்கள் அங்கத்தினராக மாறுவதற்கு உங்களை வேண்டுகிறோம். இதை நீங்கள் தேவனை விசுவாசித்து பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுக் கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று வாயினால் அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக நீரில் மூழ்கி அல்லது அடக்கம் செய்யப்பட்டு ஞானஸ்நானம் பெற வேண்டும். இப்படி நீங்கள் செய்யும் போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். (மாற். 16 : 16, அப். 2 : 47).

நீங்கள் இருக்கும் இடத்தில் சபை தொடங்கும் முயற்சியில் உங்களுக்கு உதவும்படியாக இந்த தொடரில், இப்பொழுது கர்த்தரின் பந்தி நடத்துவது எப்படி என்று பார்ப்போம்.

புளிப்பில்லாத அப்பப் பண்டிகை அல்லது பஸ்கா பண்டிகையின் சமயத்தில் தன்னுடைய சீஷர்களோடு இறுதியாக அவர் போஜனம் செய்தபோது, இயேசுக்கிறிஸ்து இப்பந்தியை ஏற்படுத்தினார். இயேசு பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தார் என்பது உண்மை. ஆனால், அது அவருடைய மரணத்தோடு முடிவுக்கு வரவேண்டியதாயிருந்தது. தன்னுடைய புதிய பிரமாணம் அல்லது புதிய ஏற்பாட்டில், மோசேயின் பிரமாணத்தை நீக்கிப் போட்டார். ஆகையால், கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலரும், பஸ்கா பண்டிகைக்கு கூடிவந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இயேசு, கர்த்தரின் பந்தியை ஏற்படுத்தினார். வேத வசனம் இப்படிக் கூறுகிறது. அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து : நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து : நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக

சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழ ரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத் 26 : 26-29) தன்னுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் வரை பங்குபெறப் போவதில்லை என்று குறிப்பிடுவதை நாம் காணலாம். அதன்பிறகு அவருடைய சீஷர்கள் அவரை நினைவு கூறும்படியாக கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது அவர்களோடு இருப்பார். கர்த்தருடைய பந்தி ஸ்தாபிக்கப்பட்டது குறித்து, மாற் 14 : 22 : 25 மற்றும் லூக். 22 : 14- 20 ஆகிய வசனப் பகுதியிலும் இடம் பெற்றுள்ளது.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு கர்த்தருடைய பந்தியைக் குறித்துச் சொல்லும் போது, இப்படி எழுதுகிறார். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன். என்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு : நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன். (I கொரிந். 11 : 23 29).

மேற்சொன்ன வசனங்களில், கர்த்தர் அவருடைய ஜனங்களை, இந்தப் பந்தியில் பங்குபெறச் செய்வார் என்பது வெளிப்படையாக உள்ளது என்று நான் நினைக்கிறேன். அதுமாத்திரமல்ல, கிறிஸ்துவின் சரீரத்தின்

நினைவாக அப்பமும், அவர் சிந்தின இரத்தத்தின் நினைவாக, திராட்சரசமும் இருக்க வேண்டுமென்பதும் தெரிகிறது. கர்த்தர் ஏன் இந்தப் பந்தியைக் கடைபிடிக்கச் செய்கிறார்? ஏனெனில், நாம் இரட்சிக்கப்படும்படியாக உயிர்நீத்த அவரையும், அவர் செய்த தியாகத்தையும், நாம் நினைவுகூறும் பொருட்டுதான் நாம் இதில் பங்கு பெறும்போது, இயேசுக் கிறிஸ்து ஒரு நாளில் மீண்டும் திரும்பி வருகிறார் என்பதை நமக்கும், கர்த்தருக்கும், உலகிற்கும் நாம் தெரிவிக்கிறோம்.

நாம் இந்தப் பந்தியில் பங்குபெறுவதற்கு முன், நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். அதாவது நாம் நம்முடைய இருதயத்தையும், வாழ்க்கையையும், சோதித்துப் பார்க்கும் போது, மனம் திரும்பாத ஒரு பாவத்தையோ அல்லது மன்னிப்புப் பெற்றிராத ஒரு பாவத்தையோ கண்டால், நாம் நம்முடைய நிலையை கர்த்தரோடு சரியாக்கிக் கொண்டு, இந்தப் பந்தியில் பங்கு பெறவேண்டும். நாம், இதைச் செய்ய மறுப்போமானால், நம்முடைய இருதயத்தை தேவனுக்கு விரோதமாக கடினப்படுத்துகிறோமென்று பொருள். இது இறுதியில் நம்மை இழந்துபோகச் செய்யும்.

யாரெல்லாம், கர்த்தரின் பந்தியில் பங்குபெறலாம்? உண்மையில், இது அவருடைய வசனங்களின்படி, அவருடைய பிள்ளைகளாக மாறியவர்களுக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பந்தியை சபையில் கொடுக்கும் போது, இதிலே கலந்துகொள்வதா? வேண்டாமா? என்பது கூடிவந்திருக்கிற தனிப்பட்டவர் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது. ஒருவருக்கு இது கிடையாது என்று நாம் தடையேற்படுத்தமுடியாது. உதாரணமாக, நாம் முன்பின் அறிந்திராத ஒருவர் ஆராதனைக்கு வந்திருக்கக் கூடும். அப்பொழுது, இவர்கள் மாத்திரம் சத்தியத்தின்படி கிறிஸ்தவர்களென்று நமக்குத் தெரிந்தவர்களுக்கு மாத்திரம் கொடுத்தால், அந்த ஆராதனைக்கு வந்திருக்கிற சரியான கிறிஸ்தவன் ஒருவனுக்கு கொடுக்க மறுத்தவர்களாகிவிடுவோம். கிறிஸ்தவரல்லாதவர், இதிலே பங்கு பெற விரும்பமாட்டார் என்று, நாம் நினைத்துக் கொண்டு இப்பந்தியைக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, இப்பகுதியை எப்பொழுது கடைபிடிக்க வேண்டும்? எவ்வளவு நாளைக்கொருமுறை செய்ய வேண்டும்? அப். 20 : 7ல் நமக்கு

முன் உதாரணம் உண்டு. அங்கு கர்த்தருடைய சீஷர்கள் - கிறிஸ்தவர்கள் அவரை ஆராதிக்கும்படியாக வாரத்தின் முதல்நாளிலே கூடி வந்திருக்கையில், கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றார்கள் என்றுள்ளது. வசனம் இவ்வாறு கூறுகிறது. வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். (அப். 20 : 7) இன்னும் அப். 2 : 42 ல் அவர்கள் (கிறிஸ்தவர்கள்) அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று பார்க்கிறோம். அவைகளில் ஒன்று அப்பம் பிட்குதல், ஆக, இந்த இரண்டு வசனப் பகுதிகளும், கர்த்தரின் பந்தி பற்றி குறிப்பிடுகிறது.

கிறிஸ்தவர்கள் எவ்வளவு நாளைக்கொருமுறை, பாடவும், ஜெபிக்கவும், வேதவசனங்களைப் படிக்கவும், காணிக்கை கொடுக்கவும், கூடுகின்றனர்? ஒவ்வொரு வாரத்தின் முதல்நாளிலும் அல்லது ஞாயிற்றுக் கிழமைகளிலும் தானே. இதேபோல்தான் கர்த்தரின் பந்திக்காகவும் கூடிவருகின்றனர். ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். (I.கொரி. 11 : 26) அது எவ்வளவு நாளைக்கொருமுறை? ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள்தோறும்.

மத உலகில், நாம் பார்க்கும் நண்பர்கள் பலர் மூன்று மாதத்திற்கொருமுறை கூட கடைபிடிக்கின்றார். வேறு சிலர் விசேஷ சந்தர்ப்பங்களில் மாத்திரம் நடத்துகின்றனர். ஆனால், நாம் வேத வசனங்களின் ஆதாரத்தோடு இக்காரியத்தில் நடந்து கொள்கிறோம். நாம் வேத வசனங்களின் கட்டளைகள் மற்றும் மாதிரிகளின்படி, காரியங்களைச் செய்யாமல், எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைப்போமானால், இப்பந்தியைக் குறித்து நாம் கவலைப்படவே தேவையில்லை தானே! ஏன், அவ்வப்பொழுது மாத்திரம் கடைப்பிடிக்க வேண்டும்? சுத்தமாக விட்டு விடலாமே.

இப்பொழுது, நீங்கள் இருக்குமிடத்திலோ அல்லது வேறு எங்கேயாகிலுமோ, ஒரு பிராந்திய சபையை தொடங்குவதாக இருந்தால், வாரத்தின் முதல் நாளிலான ஆராதனையின், ஒரு பங்காக கர்த்தரின் பந்தி

அவசியம் இருக்கவேண்டுமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அது இரண்டுபேர் இருந்தாலும் சரி, இருபதுபேர் இருந்தாலும் சரி. ஆராதனைக்கு முன்பாக ஆண் அங்கத்தினர்கள் கூடி யார் யார் என்னென்ன பங்கைச் செய்வது என்று ஆலோசிக்க வேண்டும். அப்பொழுது, கர்த்தரின் பந்திக்காக, ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அவர் கர்த்தரின் பந்தியை சபையாருக்குக் கொடுக்குமுன்பாக, வேதாகமத்திலிருந்து, I கொரி 11 : 23 -29 அல்லது மத். 26 : 26 29 போன்ற பகுதிகளிலிருந்து ஒன்றை வாசித்து, அது பற்றி சில வார்த்தைகள் சொல்லலாம். கிறிஸ்துவின் மரணத்தைக் குறிக்கும் வேறுசில வசனங்களையும் இச்சந்தர்ப்பத்தில் உபயோகிக்கலாம். அதன்பிறகு, பந்தியை நடத்துபவர், கலந்துகொள்ளும் எல்லோரும் கிறிஸ்துவின் பாடு, மரணம் ஆகியவைகளை நினைவு கூறும்படியாக கலந்து கொள்ள வேண்டுமென்று சொல்லி, அப்பத்திற்காக ஜெபிக்க வேண்டும். அதன்பிறகு, பந்தியில் கலந்துகொள்ள விரும்பும் யாவரும் பங்குபெறும்படியாய் கொண்டு செல்ல வேண்டும். வேறுயாராவது ஒருவரும் இவருக்கு உதவலாம். அப்பத்தில் பங்குபெற்ற பிறகு, இயேசுக் கிறிஸ்துவால் சிந்தப்பட்ட இரத்தத்திற்கு அடையாளமாக உள்ள திராட்சை ரசம் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்திற்காக ஜெபிக்க வேண்டும். அதன் பிற்பாடு, சிறு, சிறு கோப்பைகளில் திராட்சரசம் கொடுக்கலாம்.

கர்த்தருடைய பந்திக்கு தேவையானவைகளை ஆயத்தமாக்குவதைப் பொறுத்தளவில், பெண்கள் பெரும்பாலும் இதைச் செய்கின்றனர். இது தன்னார்வத்தில் செய்யப்படுகிறது. புளிப்பில்லா அப்பம் செய்து, திராட்சை ரசம் வாங்க வேண்டும். ரசம் கிடைக்காத பட்சத்தில் திராட்சை பழம் அல்லது திராட்சை வத்தல் வாங்கி அதிலிருந்து பிழிந்தோ அல்லது கொதிக்க வைத்தோ ரசம் உண்டாக்கலாம். இவைகளை சனி இரவோ அல்லது ஞாயிறு காலையோ செய்யவேண்டும். அப்பத்தை ஒரு தட்டில் வைக்க வேண்டும். திராட்சை ரசத்தை ஒரு பாத்திரத்திலோ அல்லது ஒரு கண்ணாடிக் குவளையிலோ அல்லது சிறு சிறு கோப்பைகளிலோ ஊற்றி வைக்க வேண்டும். பிறகு, இப்பாத்திரங்களை, வெள்ளைத் துணியால், மூடப்பட்ட சிறு மேஜையின் மீது வைக்க வேண்டும். இதில் பங்கு பெறுகிற யாவரும், இப்பந்தியில் பங்குபெற முடிந்ததை ஒரு கனமான ஒரு காரியமாகக் கருத வேண்டும்.

*(மீதியை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.)* J.C. சோட்

# அவர்கள் எப்படி இரட்சிக்கப்பட்டார்கள்?

"அப்போஸ்தலர் நடபடிகளில் யார், யார் கிறிஸ்தவர்களாக மாறினார்கள் என்பதைப் படிக்கலாம்" என்று கூறிக் கொண்டே தன்னுடைய நாற்காலியை மேசையினருகே இழுத்தான் ஆன்ட்ரூ.

ரேச்சல், தீமோத்தேயுவை படுக்கையில் கிடத்திவிட்டு, தன்னுடைய பாடக் குறிப்புகளை மேசைக்கு கொண்டு வந்தாள். நாம் அப்.8ம் அதிகாரம் வரை வாசித்து முடித்திருக்கிறோம் என்று தன்னுடைய வேதாகமம், மற்றும் அட்டவணைப்படுத்திய நோட்டு புத்தகம் ஆகியவற்றை எடுத்து வந்தாள்.

"இங்கே ஒரு சுவாரசியமான பகுதி உள்ளது" என்றான் ஆண்ட்ரூ. இது சவுலைப் பற்றிக் கூறுகிறது . ஸ்தேவனைக் கல்லெறிந்தபோது உடன் இருந்தவன். கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறினவன். புருஷரையும், ஸ்தீரிகளையாகிலும் தான் கண்டுபிடித்தால் அவர்களைக் கட்டி எருசலேமுக்கு கொண்டு வரும்படி தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களை கேட்டு வாங்கினவன்.

ரேச்சல், இப்பொழுது நாம் சபை எவ்வாறு அழைக்கப்பட வேண்டும், விசுவாசிகள் எவ்வாறு அழைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வேதம் என்ன கூறுகிறது என்று இரண்டு காரியங்களையும் தனித்தனியே அட்டவணைப்படுத்த வேண்டும். இன்றைக்கு உலகத்தில் அநேக பெயர்கள் வழங்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். ஒருவேளை அவைகள் எல்லாம் சரியாகக் கூட இருக்கலாம். ஆனால் நாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் மட்டுமே இரட்சிப்பு என்பதை முதலிலேயே வாசித்துவிட்டோம். பிலிப்பு என்பவன் சமாரியாவிலே இயேசுவின் நாமத்தையும், ராஜ்யத்தைப் பற்றியும் போதித்தான். நாம் இனி தொடர்ந்து வாசிக்கும்போது எந்த பெயர்களை வேதம் உபயோகிக்கிறது என்பதை பார்க்கலாம். சரியா?

"ஆம் என ஒத்துக் கொண்டாள் ரேச்சல்". சபையின் பெயர்கள், தேவனுடைய ராஜ்யம்" "பரலோக ராஜ்யம்" என்று ஆரம்பத்தில் இருந்தது என்று நான் நினைக்கிறேன். இயேசு கிறிஸ்து சபையைப் பற்றிக் கூறும்போது "என் சபை" என்கிறார். பொதுவாக "சபை" என்று பல இடங்களில் காணப்படுகிறது.

சில இடங்களில் நாம் வாசிக்கிறோம் சபை என்பது "கிறிஸ்துவின் சரீரம்" என்று. கொலோசேயர் 1 : 18, 24 ஆகிய வசனங்களில் உள்ள சரீரம் என்பதற்கு ஒத்த வாக்கியத்தில் அர்த்தம் பார்க்கிறாள். ஆண்ட்ரூ எனக்கு இந்த ஒத்தவாக்கியத்தை வாங்கிக் கொடுத்ததற்கு மிகவும் நன்றி. வேதாகம சம்பந்தப்பட்ட வார்த்தைகளுக்கு அர்த்தம் காண இது இல்லாமல் எப்படி முடியும்? ஒருவேளை வேதாகமத்தில் நடுவில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை உதவலாம். ஆனால் முழுமையாக அல்ல. ஒருவர் உண்மையாகவே உண்மையைத் தேடி வேதத்தின் உதவியை நாடுவார்களானால் ஒத்தவாக்கியம் கட்டாயமாக அவர்களுக்கு உதவும். இவ்வளவு சீக்கிரம் நாமாக கற்றுக்கொள்ள இது மிகவும் உதவியாக இருந்தது.

"ஆம்" "இது ஓர் அற்புதமான புத்தகம்" என்று ஒத்துக் கொண்டான் ஆண்ட்ரூ. இப்பொழுது மீண்டும் சபையைப் பற்றி வேதாகமத்தில் வேறு என்ன பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது? 'தேவனுடைய வீடு', 'தேவனுடைய குடும்பம்' மற்றும் ஒரு இடத்தில் "சபையார்" என்ற அழைக்கப்படுகிறது.

அதைப் போலவே சபையிலுள்ள மக்களும் இவ்வாறாக அழைக்கப்படுகிறார்கள். "தேவனுடைய சீஷர்கள்", "விசுவாசிகள்" , "சகோதரர்" என்று. ஆமாம் எப்பொழுது "கிறிஸ்தவர்கள்" என்ற பெயர் வழங்கப்படலாயிற்று? என்று குழப்பமடைந்தவனாய் ஆச்சரியத்தோடு இக்கேள்வியை கேட்கிறான். சபைக்காக கொடுக்கப்பட்டுள்ள ஒரு பெயரில் கூட இன்றைக்கு இயங்கி வரும் பெயர்கள் இல்லையே? அவைகள் ஏதோ விளக்கங்களைப் போல் உள்ளது. ஆதியிலிருந்து ஒரே ஒரு சபைதான் "சபை", "குடும்பம்" ஆகிய பெயர்களில் அழைக்கபட்டுள்ளது. இதுவே போதுமானதும் கூட.

ஆனால், ஆண்ட்ரூ ஒரே ஒரு சபை இருக்குமானால், உலகில் எங்கெல்லாம் இக்கூட்ட மக்கள் இருப்பார்களோ அவர்கள் எல்லாம் ஒரே சரீரத்தில் இணைக்கப்பட்டு ஒரே சபையாக இருக்கிறார்களா? ரேச்சல் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

எனக்கு தெரிந்ததிலிருந்து, நாம் இதுவரை வாசித்ததிலிருந்து ஒரே ஒரு சபை தான் உள்ளது. மத உலகில் உள்ள இந்த மாபெரும் உண்மையை எண்ணி அமைதியாக சிந்திக்கலானாள் ரேச்சல்.

சரி, சவுலின் மனமாற்றத்திலிருந்து இப்பொழுது ஆரம்பிப்போம் என ஆண்ட்ரூ கூறினான்.

இங்கே போதித்தவர் இயேசுக் கிறிஸ்து. கேட்டவர் சவுல். போதிக்கப்பட்டது ஏன் சவுல் தன்னை துன்பப்படுத்துகிறான் என்பது. அங்கே சவுல் - உடனே இயேசுவை ஆண்டவரே என்று அங்கீகரித்துக் கொண்டான். அவன் விசுவாசித்ததால் - தமஸ்குவில் அவன் உபவாசித்து, ஜெபித்தான். அவனின் மன உருக்கத்திற்கு இது உதாரணம். அனனியா வந்து அவனிடம் ஞானஸ்நானம் எடுக்கச் சொல்கிறான். அதற்கு பலனாக தேவன் அவன் பாவத்தை கழுவினார். (இரட்சிப்பு).

"இந்த மனிதனுக்கு எப்படி ஒரு மனமாற்றம்"! ரேச்சல் கூறினாள். இந்தச் செயலுக்கு அவ்வளவு தைரியம் தேவையாயிருக்கிறது. தன்னுடைய குடும்பம், தன்னைச் சார்ந்தவர்களை, விட்டுவிலகி எதை எதிர்த்து போராடினானோ அதைத் தன் சொந்தக் குடும்பமாக ஏற்றுக் கொண்டு, எந்த மக்களை வெறுத்தானோ அவர்களை தன் சொந்தக் குடும்பத்தின் மக்களாக ஏற்றுக் கொள்ள அலாதி தைரியம் வேண்டும். ஆண்ட்ரூ, நாம் அவன் ஸ்தானத்தில் இருந்தால் அவ்வளவு தைரியம் நமக்கு வருமா? என்றாள்.

"எனக்குத் தெரியவில்லை" ரேச்சல். நாமும் இந்தமாதிரிக் கேள்வியை சந்திப்போம் என்று நீ நினைக்கிறாயா? நாம் தேவனுக்கு கீழ்ப்படிய விரும்புகிறோம். ஆதிக் கிறிஸ்தவர்களைப் போல இரட்சிக்கப்படவும், இயேசுக் கிறிஸ்து ஆரம்பித்த சபையில் அங்கமாகவும் விரும்புகிறோம். நம்மைச் சுற்றிலும் இருக்கிற சபைகள் வேதாகமத்தில் உள்ள சபையை போல இல்லை. நம்முடைய குடும்பத்தாரும் நம்முடைய உறவினர்களும் அங்கமாக உள்ள சபைகளில் நாம் சேர முடியாது.

"நாமும் இந்தமாதிரி செய்யலாமென்று நினைக்கிறாயா?"

"ஆம்"

"அவ்வளவு தூரம் நான் நினைக்கவில்லை", என்றாள் ரேச்சல். சிறு நேர மௌனத்திற்குப் பிறகு கனத்த இருதயத்தோடு கூறுகிறாள், "எது சரியோ அதை செய்ய விரும்புகிறேன்".

"ஆக நாம் இருவரும் அந்நிலையில்தான் இருக்கிறோம்." என ஆண்ட்ரு முணுமுணுத்தான். எனவே அடுத்து மனம் திரும்பியவர்கள் பட்டியலில் யார் என்று பார்ப்போம். இங்கே கேட்டவர்கள்- நூற்றுக்கு அதிபதி கொர்நெலியு, மற்றும் உறவினர்கள், நண்பர்கள். வசனப்பகுதி - அப்போஸ்தலர் 10.அதி. பேதுரு போதிக்கிறார். போதிக்கப்பட்டது-இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்த தேவனுடைய குமாரன் என்பது. அங்கே - கொர்நெலியும் அவன் வீட்டாரும் விசுவாசித்தார்கள். பின்பு ஞானஸ்நானம்

பெற்றுக் கொண்டார்கள். தேவன் அதற்குப் பதிலாக, பாவங்களிலிருந்து அவர்களை விடுவித்தார். வசனம் 43 (இரட்சிக்கப்பட்டார்கள்)

"கொர்நெலியுவின் மனமாற்றத்தையொட்டி நாம் அறிந்து கொண்டது அவன் ஒரு புறஜாதியான் - யூதன் அல்ல - இவனும் கூட கிறிஸ்தவனாக வேண்டியிருந்தது" என்று ஆண்ட்ரூ கூறினான்.

"இதுவரை யூதர்கள் தான் ஞானஸ்நானம் பெற்று வந்தார்கள் இல்லையா?" ரேச்சல் கேட்டாள்.

"அப்படித்தான்" என பதிலுரைத்தான் ஆண்ட்ரூ. ஏனென்றால் இந்த அதிகாரத்தின் கடைசிப் பகுதியில் பார்த்தால் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் இறங்கும்வரை பேதுரு ஞானஸ்நானம் கொடுக்கத் தயங்கினான். பின்புத் தேவன் இதை அனுமதிக்கிறார் என்பதை உணர்ந்தான்.

தொடர்ந்து அவர்கள், அடுத்த அதிகாரத்தைப் படித்துக் கொண்டு பேதுரு எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்களிடம் வாதிட்டுக் கொண்டிருந்தபோது அவன் கூறுகிறான். அப். 11 : 15 "பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே அவர்கள் மேலும் இறங்கினார்" என்றான். அப்படியானால் அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்தஆவி கொடுக்கப்பட்டது போலவே கொர்நெலியேவுக்கும் கொடுக்கப்பட்டதா? இரண்டு இடங்களிலும் ஒரே மாதிரியாக பரிசுத்த ஆவியானவர் அருளப்படவில்லையா?

"அதுவும் சரியாகத்தான் உள்ளது". ஆண்ட்ரூ பதிலுரைத்தான். நாம் அதைப்பற்றி இன்னும் விளக்கமாகப் படிக்க வேண்டும். எதிர்காலத்தில் நாம் படிக்க வேண்டிய பாடங்கள் மிக நீண்டபட்டியலாக உள்ளது என்று கூறி புன்னகைத்தான்.

மீண்டும் மனம் திரும்பியவர்களின் பட்டியலைப் பார்ப்போம்? சவுல் - இப்பொழுது பவுல் என்றழைக்கப்படுகிறான் - சுவிசேஷ பயணத்தை தொடர்ந்து பிலிப்பி பட்டணத்திற்கு வந்து அங்கு அவன் பிரசங்கிக்கிறான். கேட்டவர்கள்-லீதியாளும் அவள் வீட்டாரும். வசனப்பகுதி- அப்போஸ்தலர் 16.அதி. அவன் என்ன பிரசங்கித்தான் என்று கூறப்பட வில்லை. ஆனால் வசனம் என்ன சொல்கிறதென்றால் அவள் உட்கார்ந்து அவர்கள் போதித்ததைக் கேட்டாள். பிறகு அவளும், அவளோடிருந்தவர்களும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று.

பிற்பாடு பவுலும், உடன் ஊழியன் சீலாவும் சிறைச்சாலையில் போடப்படுகிறார்கள். பூமி அதிர்ச்சியின் மூலமாக அவர்கள் விடுதலை

ஆகிறார்கள். ஆனால் அவர்கள் தப்பித்துக் கொள்ள முயலவில்லை. சிறைச்சாலைக்காரன் மிகுந்த ஆச்சரியப்படுகிறான். அவன் கேட்கிறான், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?". பவுலும் சீலாவும் அவர்களிடம் பேசுகிறார்கள் கேட்டவர்கள்- சிறைச்சாலைக் காரனும் அவன் வீட்டாரும். வசனப்பகுதி- அப். 16 : 25. பவுல் தேவனுடைய வார்த்தையைப் பேசினான். அவர்கள் விசுவாசித்தார்கள். காயங்கள் கழுவப்பட்ட பின்பு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். அதன் பலனாக அவன் மகிழ்ச்சியோடே இருந்தான்.

பிறகு பவுல் கொரிந்து பட்டணத்திற்கு போகிறான். கேட்டவர்கள்- கொரிந்தியர்கள், குறிப்பாக கிறிஸ்பு என்ற ஜெப ஆலயத் தலைவன். வசனப்பகுதி -அப் 18 : 8. அவன் இயேசுவே கிறிஸ்து என்று போதித்தான். அவன் பிரசங்கித்தித்தை கிறிஸ்புவும், கொரிந்தியரும் கேட்டார்கள், விசுவாசித்தார்கள், ஞானஸ்நானம் பெற்றார்கள்.

"மற்றுமோர் விசேஷித்த சூழ்நிலை அப். 19ல் காணப்படுகிறது" ரேச்சல் கூறினாள். இந்த மக்கள் முதலிலேயே யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றவர்கள், பவுல் அவர்களிடம் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறீர்களா என்று கேட்டதற்கு அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் அறியாதிருந்தார்கள். யோவான் இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தியவன்தான் என்று பவுல் கூறிய போது, இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகையால் பவுல் இயேசுவைப் பற்றி பிரசங்கித்த போது அவர்கள் விசுவாசித்தார்கள். உடன் ஞானஸ்நானம் பெற்றார்கள். இதுவும் நம் அட்டவணைக்கு தேவை என்று சிரித்துக்கொண்டே எழுதுகிறாள் ரேச்சல்.

"உண்மையாகவே இது என் மனதிலிருந்த கேள்விக்குப் பதிலளிப்பதில் உதவியாக இருக்கிறது" என்று ரேச்சல் கூறினாள்.

நான் சிறுபிள்ளையாக இருக்கும்போது ஞானஸ்நானம் எடுத்தேன் என்று உங்களிடம் கூறியிருக்கிறேன், ஞாபகம் இருக்குமென்று நம்புகிறேன். உண்மையைச் சொல்லப்போனால் நான் செய்ததைப் பற்றி ஒன்றும் புரியவுமில்லை. அது ஏனென்று தெரியவுமில்லை. ஆகவே, இப்பொழுதோ நான் எல்லாம் புரிந்து கொள்ளக்கூடிய வயதை அடைந்துவிட்டதினால் இப்பொழுது ஞானஸ்நானம் எடுப்பதில் என்ன தவறு என்றும் நினைக்கின்றேன்.

இந்த நிகழ்விலிருந்து நாம் அறிந்து கொள்வதென்னவென்றால் ஞானஸ்நானம் மட்டும் எடுத்துக்கொண்டால் தேவனுக்கு முன்பாக சரியாகாது. ஞானஸ்நானத்தைப் பற்றி எல்லாம் சரியாக புரிந்து

கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அப்படியில்லையென்றால் அது ஞானஸ்நானம் ஆகாது என்று நிரூபணமாகிறது என்று எடுத்துரைத்தான் ஆண்ட்ரூ. நான் சிறு பிள்ளையாய் இருக்கும் போதே கிறிஸ்தவனாக்கப்பட்டேன் என்பதில் எனக்கு பிரச்சினை ஒன்றுமில்லை. ஆனாலும் என் பெற்றோர்கள் அதை ஞானஸ்நானம் என்றெண்ணினார்கள். வேதாகமம் அப்படிப் போதிக்கவில்லை. ஆகவே அது தவறாகிறது. நீங்கள் தண்ணீர் தெளிக்கப்பட்டோ, அல்லது ஊற்றப்பட்டோ அல்லது முறையற்ற போதனையின்படி தண்ணீருக்குள் மூழ்கியோ ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும் அது ஞானஸ்நானம் ஆகாது.

"இந்த சம்பவம் வேதாகமத்தில் கூறப்பட்டிருப்பதைக் குறித்து மகிழ்கிறேன்" என்றாள் ரேச்சல். இது குழப்பத்திலிருந்து நம்மை விடுவிக்கிறதாய் இருக்கிறது. இவ்வுலகத்தில் ஞானஸ்நானம் எடுத்துவிட்டோம் என்றெண்ணிக் கொண்டிருந்தாலும் அது தேவனுக்கு முன்பாக தவறாயிருக்கும், மக்களை எண்ணிப் பாருங்கள். வேத வாக்கியங்களை அறிவதும் அதின் மூலம் தேவனின் பார்வைக்கு முன்பாக சரியானதை செய்வதும் எவ்வளவு முக்கியமானதாய் இருக்கிறது.

**B.B. சோட்** **R. R. நாயகம்.**

---

சிறுவர் பகுதி

# தண்ணீரை தேடும் மான்கள் . . .!

அன்பான தம்பி தங்கைகளே, உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தினால், புத்தாண்டு வாழ்த்துக்கள். ஒரு ஊரில் அழகிய பாலைவனச் சோலை ஒன்று இருந்தது. அதிலே மான்கள் கூட்டம் கூட்டமாக வசித்து வந்தது. அவைகளில் இரண்டு மான்கள் மட்டும் எப்பொழுதும் ஒன்றாகவே சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருக்கும். அந்த இரண்டு மான்களும், புல், இலை தழைகளை மேய்ந்து கொண்டு, தாகம் எடுக்கும்போது, அருகிலுள்ள ஓடையில் சென்று தண்ணீர் பருகிக் கொண்டு வரும். அது தன்னுடைய அழகை தண்ணீரில் பார்த்து ரசித்துக் கொண்டே தண்ணீர் குடிக்கும். இப்படியே நாட்கள் கழிந்தது. சில வருஷமாக அந்த பகுதியில் மழையே பெய்யவில்லை. ஆகவே தண்ணீரும் வற்றியது. உணவும் அதற்கு கிடைக்கவில்லை, அவைகள் இரண்டும் உணவுக்காகவும், தண்ணீருக்காகவும் அலைந்து வெகுதூரமாக சென்றது.

அந்த சமயத்தில், எப்பொழுதும் ஒன்றாகவே இருக்கும் மான்களிரண்டும் செல்லும் வழி நெடுக கிடைத்த இலை தழைகளை தின்று கொண்டே சென்றது. வெகுதூரமான பயணத்தால் அவைகளின் உடல் சோர்ந்து, நா வறண்டு தண்ணீருக்காக, ஓடை ஏதாவது இருக்கிறதா! என்று தேடியது. இறுதியாக, ஒரு இடத்தில் தண்ணீர் இருப்பதைக் கண்டது.

அந்த இடம் செல்வதற்கு கடினமான பகுதியாகவும், அது இரண்டு மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியாகவும், ஒரு குறுகலான பாதையாகவும் இருந்தது. எப்படியோ, அவைகள் இரண்டும் மிகவும் கஷ்டப்பட்டு அந்த இடத்தை அடைந்தவுடனே, அது மிகவும் சந்தோஷப்பட்டு மிக ஆவலாய் தாகம் தீர தண்ணீரைப் பருகியது. அதினால், அந்த மான்கள் இரண்டும் தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக் கொண்டது. உடனே அவைகள் இரண்டும் தன்னைப் போல ஜீவனுக்காக போராடிக் கொண்டிருக்கிற தன் இனத்தாருக்கும் இச்செய்தியைச் சொல்லவேண்டும் என்று நினைத்து, உதவி செய்ய சென்றது. ஒரு சில மான்கள் மட்டும் அந்த இரண்டு மான்களுடைய வார்த்தையை நம்பி வந்தது. அவைகளெல்லாம் தாகம் தீர தண்ணீரை பருகி பிழைத்துக் கொண்டது. தங்களுடைய ஜீவனையும் காத்துக் கொண்டது. ஆனால், அவ்விரண்டு மானின் வார்த்தையை கேட்காத மற்ற மான்களெல்லாம் இறந்துவிட்டது.

அருமையான தம்பி, தங்கைகளே, சங்கீதம் 12 . 1ல் மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்து கதறுகிறது என்று தாவீது கூறுவது நினைவுக்கு வருகிறது. இந்த கதையின் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது. என்னவென்றால், ஆதியிலே வார்த்தையாய் இருந்தவர் மனித சாயலை தரித்துக் கொண்டு, இப்பூமிக்கு வந்தார். அவரை ஏற்றுக் கொள்ளாத, யூத ஜனங்கள் அவரை சிலுவையில் அறைந்துவிட்டார்கள். (யோவான் 1 : 11). அவர்தான் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து. நாம் என்றென்றைக்கும் வாழும்படியாக, ஜீவ தண்ணீர் இருக்கும் இடத்திற்கு வழி காட்டுகிறார். (யோவான் 4 : 14 : 14 : 6).

ஆகவே, நீங்கள் ஜீவ தண்ணீர் உள்ள இடத்திற்கு செல்லலாம் என்று ஆசைப்படுகிறீர்களா? அவ்விரண்டு மான்களின் வார்த்தையை கேளாமல் போன மான்களைப் போல இருக்காமல், வார்த்தையைக் கேட்டு உயிர் பிழைத்துக் கொண்ட மான்களைப் போல நாமும் இயேசுவின் வார்த்தையைக் கேட்டு, இச்சிறு பிராயத்திலிருந்தே அவருக்குப் பிரியமான பிள்ளைகளாக வாழ்வோம்.

அப்படிச் செய்தால் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஜான்பீட்டர்

# தெரிந்து கொள்ளுங்கள்

## பாலஸ்தீனா நாட்டின் வரலாறு

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து மனிதனாகப் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்த புண்ணிய பூமியாகிய கானான் அல்லது பாலஸ்தீனா நாட்டைப் பற்றிய விவரங்கள் கிறிஸ்தவ மக்களாகிய நமக்குத் தெரிந்திருப்பது அவசியம். ஏனெனில், அந்த நாட்டின் புவியியல் வரலாறு, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளை யொட்டித் தான் நமது பரிசுத்த வேதாகமம் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே பரிசுத்த வேதாகமத்தை சீராகவும், சுலபமாகவும் புரிந்து கொள்வதற்கு பாலஸ்தீனா நாட்டின் இயற்கை அமைப்புகள், வரலாற்றுச் சிறப்புகள், நாகரீகம் ஆகியவற்றை நாம் தெரிந்து வைத்திருப்பது உதவியாக இருக்கும்.

பாலஸ்தீனா என்னும் சொல் "பிலிஸ்தியா" என்ற சொல்லின் சிதைவு ஆகும். இந்நாட்டின் இயற்பெயர் கானான் என்று வேதாகமம் கூறுகிறது. ஆதி 12 : 5, எபிரெய மொழியில் பெலெஷெத் (Pelesheth) என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் இந்நாட்டின் எல்லா பகுதிகளிலும் நன்மை செய்பவராகச் சுற்றித்திரிந்தமையால் இதைப் 'புண்ணிய பூமி' ( Holy Land) என்றும் அழைப்பர்.

இதன் பூர்வீகக் குடிகள் கானானியர், எமோரியர், ஏத்தியர் ஓரியர், அமலேக்கியர் என்பவர்கள் ஆவர். இவர்கள் நோவாவின் குமாரன் "சேம்" கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்காலம் என்றும், அவர்கள் வடகிழக்கு அரேபியாவிலிருந்து வந்து சுமார் கி.மு. 3000 ஆண்டுவாக்கில் இங்கு குடியேறியிருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

பாலஸ்தீனா தேசத்தில் மலைநாடுகள் மிகுதி, தட்பவெப்ப நிலை மிதமானது. சவக்கடல் பள்ளத்தாக்குப் பகுதிகள் சற்று உஷ்ணப் பிரதேசம் ஆகும். அக்டோபர் முதல் மார்ச்சு மாதம் வரை மழை காலம். மற்ற மாதங்களில் மழை பெய்வது அபூர்வம். இங்கு கோதுமை, பயிறு, கடலை, பருத்தி விளையும். திராட்சை, அத்திமரங்கள் ஒலிமெரங்கள், ஆகிய கனிதரும் மரங்கள் மிகுதி.. நரி, ஓநாய், பலவிதமான மான்கள், பன்றி, முயல், காட்டுப்பூனை, ஒட்டகம், எருமை, ஆடு, மாடு, கழுதை, நாய் ஆகிய மிருகங்களும், கழுகு, கௌதாரி, புறா, கொக்கு, கோழி போன்ற பறவைகளும் காணப்படும். முற்காலத்தில் சிங்கங்கள் கூட இருந்தனவாம்; இப்பொழுது இல்லை. ஊரும் பிராணிகளில் பாம்புகளும், பல்லிகளும், குறிப்பிடத்தக்கவை.

ஆபிரகாமின் சந்ததியார்கள் இந்நாட்டைக் கைப்பற்றிய பின்னர் இதற்கு 'இஸ்ரவேலர் நாடு' என்று பெயர் வழங்கலாயிற்று. 1 சாமு. 13 : 19. இஸ்ரவேலின் முற்பிதாக்களாகிய ஆபிரகாம் முதலியவர்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஆசியாவிலிருந்து சீரியா நாடுகளில் சுற்றித் திரிந்து கானான் தேசத்திலும், அதற்கு தெற்கே சீனாய் மலைநாட்டிலும் தங்கியிருந்தனர். ஆபிரகாம் சந்ததியார் ஐபிராத்து ஆற்றைத் தாண்டிப்போனதால் 'எபிரெயர்' எனப் பெயர் பெற்றனர். அவர்கள், யோசேப்பு எகிப்தின் அதிபராக இருந்த நாட்களில் எகிப்துக்குச் சென்று பலுகிப் பெருகினார். பின்பு, யோசேப்பை அறியாத ஓர் அரசனின் காலத்தில் அடிமைகளாக்கப்பட்டனர். ஏறக்குறைய 430 ஆண்டுகள் அடிமைகளாக இருந்த இம்மக்களை, மோசே என்னும் தலைவர், ஏறக்குறைய கி.மு. 1450 ஆண்டு வாக்கில் விடுவித்தார். சுமார் 40 ஆண்டுகள் பாலைவனப் பயணம் செய்து கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்த கானான் தேசத்தை வந்து அடைந்தனர். கி.மு. 1025 வரை மோசே, யோசுவா போன்றவர்களும் பின்னர் நியாயாதிபதிகளும் இவர்களை ஆண்ட பிறகு சவுல் என்ற பென்யமீன் கோத்திரத்தானை முதல் அரசனாக்கினார்கள். அவர் 40 ஆண்டுகள் ஆண்ட பிறகு தாவீது என்னும் ஈசாயின் குமாரன் கி.மு. 1017ல் அரசராக்கப்பட்டார். அவரும் 40 ஆண்டுகள் நல்லாட்சி செய்த பிறகு சாலமோன் என்ற தாவீதின் குமாரன், அரசராகி கி.மு. 977 - 937 வரை 40 ஆண்டுகள் அரசோச்சினார்.

ஏறத்தாழ 120 ஆண்டுகள் ஒரே குடையின் கீழ் இருந்த இஸ்ரவேல் அரசு இரண்டாக உடைந்தது. வடக்கு அரசுக்கு 'இஸ்ரவேல்' நாடு என்றும், தென் அரசுக்கு 'யூதா' என்றும் பெயர். வடநாட்டுக்கு 'யெரொபெயாம்' தென்நாட்டுக்கு 'ரெகொபெயாம்' அரசரானார்கள். வடநாட்டின் தெய்வ வழிபாட்டில் மாசு படிந்து பல்வேறு விதமான ஒழுக்கக் கேடுகள் தலைதூக்க ஆரம்பித்தன. முடிவில் கி.மு. 722ல் அசீரியா நாட்டு அரசரால் கைப்பற்றப்பெற்று அடிமையானது. தென்நாட்டின் நிலை அவ்வளவு மோசமாக இல்லாவிட்டாலும் பெருமைப்படத்தக்க விதத்தில் அவர்களுடைய ஆட்சியும் இருக்கவில்லை.

யோயாக்கீன் என்னும் அரசனின் காலத்தில் அன்றைய வல்லரசாக விளங்கிய பாபிலோன் நாட்டு அரசன் நேபுகாத்நேச்சார் கி.மு. 597-ல் முதல் முறையாகவும், சிதேக்கியா என்னும் அரசன் காலத்தில் (கி.மு. 588ல்) முழுமையாகவும் அழித்துப் போட்டு பிரபுக்களையும், ஆசாரியர்களையும் சிறைப்படுத்திச் சென்றான். பாரசீக மன்னன் 'கோரேஸ்' பாபிலோனை வென்று, அடிமைகளாக இருந்த யூதர்களை விடுவித்து அவர்கள் தாய் நாட்டுக்குத் திரும்பிச்செல்ல உத்தரவிட்டார். செருபாபேல், எஸ்றா, நெகேமியா போன்றவர்கள் தலைமையில் மீண்டும் எருசலேம் கடல்

பட்டணத்தையும் தேவாலயத்தையும் மதிற் சுவர்களையும் கட்டி மீண்டும் தேவனை ஆராதித்தார்கள். எபிரெயர்கள், கி.மு. 587 முதல் மக்கபேயர்கள் காலம் வரை சற்றேறக்குறைய 250 ஆண்டுகள் பாபிலோனியர்கள், பாரசீகர்கள், மகா அலெக்ஸாண்டர், எகிப்தியர்கள், சீரியர்கள் ஆகியோருக்கு அரசியல் அடிமைகளாக இருந்தபோதிலும், மத சுதந்தரம் உள்ளவர்களாக வாழ்ந்து வந்தார்கள். பின்னர் மக்கபேயர்கள் தலைமையில் அந்நிய ஆதிக்கத்தை உடைத்தெறிந்து சுதந்திரமாக சிலகாலம் வாழ்ந்தனர். ஆனால், கிமு 63ல் ரோமர்கள் எருசலேமைப்பிடித்து தங்கள் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்தனர். ரோம அரசின் சார்பில் எரோதின் குடும்பத்தினர் ஆளுகை நடத்தினர். அவர்களுள் தலைசிறந்தவர். கி.மு. 37-4 வரை அரசாண்ட பெரிய ஏரோது ஆவார். அடிமைகளாக இருந்த நிலையிலேயே அவர்கள் அரசுக்கு எதிராக அடிக்கடி கலகம் செய்து கொண்டே இருந்தார்கள். இறுதியாக ரோமத் தளபதி 'தீத்து' (Titus) என்பவர் எருசலேமை முற்றுகையிட்டு தேவாலயத்தையும் அழித்து நிர்மூலமாக்கிவிட்டான். இப்படியாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட எபிரெய இனத்தின் பூர்வீக வரலாறு பரிதாபமாக முடிவு பெறுகிறது.

***இந்த நாட்டைப் பற்றி சில குறிப்புகள் :***

1. **எல்லைகள் :**

வடக்கே : லிபனோன் மலைத்தொடரும் எர்மோன் மலையும்
மேற்கே : மத்திய தரைக்கடலின் கீழ்ப்பகுதியாகிய பெருங்கடல்
தெற்கே : இதுமேயா என்ற நாடு
கிழக்கே : அரேபியா பாலைவனம்

2. **நீளம் :**

தெற்கு வடக்கில் 153 மைல்கள் அகலம் : வடபாகத்தில் 23 மல்கள் தென்பகத்தில் 93 மைல்கள் நாட்டின் பரப்பு : 9700 சதுர மைல்கள்.

3. **முக்கிய நதி : யோர்தான்**

உற்பத்தி ஸ்தாபனம் : லீபனோன் மலை (கடல் மட்டத்துக்கு மேல் 1696 அடி) சங்கமம் : சாக்கடல் (கடல் மட்டத்துக்குக் கீழ் 1300 அடி) பாயும் இடம் : ஹலொ, திபேரியா. நீளம் : 103 மைல்கள்.

4. **கடல்கள் : திபேரியாக் கடல்**

இதன் வேறு பெயர்கள் : கலிலேயாக் கடல், கெனசரத்துக்கடல் நீளம் : 13 மைல்கள் அகலம் : விரிவான இடத்தில் 7 1/2 மைல், மதுரமான தண்ணீர், நிறைய மீன்கள் உற்பத்தியாகும். இதைச் சுற்றியுள்ள பட்டணங்களும், ஊர்களும் நமது ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கு நன்கு அறிமுகமானவைகள்.

சாக்கடல் : நீளம் : தென்வடலில் 47 மைல்கள்
அகலம் : மிக அதிகமான இடத்தில் 10 மைல்கள்.

மட்டத்துக்குக் கீழ் 1300 அடி. உலகத்திலேயே மிகப் பள்ளமான இடம் என்று கருதப்படுகிறது. தண்ணீர் மற்ற கடல் நீரைக் காட்டிலும் மிக உப்பானது. கடலில் வாழும் சராசரி உயிரினங்கள் வாழத் தகுதியற்றது.

## 5. மலைகள் :

**லீபனோான் :** சுமார் 100 மைல் தூரம் பரவியுள்ள இம்மலைத் தொடர் பாலஸ்தீனா நாட்டின் வடக்கு எல்லையாக அமைந்துள்ளது. இதன் மிக ï |£id MAºu 10,020 ë Y.wA ë X£ce |ãÈ í dÇ Aãடுகளில் கேதுரு மரங்கள் என்னும் ஒரு வகை உயர்ந்த ரக மரங்கள் கிடைக்கின்றன.

**எர்மோன் :** ஏன்ட்டி லீபனோன் மலையின் (Anti Lebanon) தென்கோடியில் உள்ள சிகரம். இங்கேதான் மத்தேயு சுவிசேஷகன் குறிப்பிடுகிற இயேசு மறுரூபமான சம்பவம் நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (மத்தேயு 17 : 1 ff) ஒரு காலத்தில் பாகால் விக்கிரக ஆராதனைக்காரர்களின் கூடாரமாக இருந்தது (நியாயாதிபதிகள் 3 : 1 ff).

**கர்மேல் :** மத்திய தரைக் கடலுக்குள் நீண்டு கொண்டிருக்கிற ஒரு மலை. இங்கேதான் ஆகாப் அரசன் காலத்தில் பாகால் தீர்க்க தரிசிகளுக்கும் யெகோவாவின் ஊழியக்காரனான எலியா தீர்க்கதரிசிக்கும் மெய்யான தேவன் யார்? என்பதை நிரூபிக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. 1 ராஜா 18-ம் அதிகாரம்.

**கெரிசிம் :** கர்த்தரால் ஆசீர்வதிக்கும்படி இஸ்ரவேல் கோத்திரத்தில் சிலரை மோசே கூட்டிச் சேர்த்த இடம். உபா 27 : 11-26.

இந்த மலையின் மேல் சமாரியர் தங்களுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி அங்கே தொழுது வந்தார்கள். யோ 4 : 20, 21

**ஒலிவமலை :** எருசலேமிலிருந்து ஒரு ஓய்வு ஓய்வு நாள் பிரயாண தூரத்தில் உள்ளது. இயேசு கிறிஸ்து இந்த மலைக்கு அடிக்கடி ஓய்வுக்காகவும், ஜெபம் செய்வதற்காகவும் போவது வழக்கம். கெத்சமனே தோட்டமும், பெத்பாகே, பெத்தானியா ஆகிய ஊர்களும், இம்மலையின் சரிவிலும், அடிவாரத்திலும் இருந்தன.

**ஏபால் :** சமாரியாவில் கெரிசிம் மலைக்கு எதிராக உள்ளது. கர்த்தருடைய சாபத்தைப் பெற்றுக் கொள்ளும்படி இஸ்ரவேல் கோத்திரத்தாரில் சிலரை மோசே கூட்டிச் சேர்த்த இடம். உபா: 27 : 13 ff

## 6. முக்கிய பட்டணங்கள் :

**எருசலேம் :** தாவீது அரசனால் நிர்மாணிக்கப்பட்ட நகரம் ஒன்றுபட்ட இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தின் தலைநகராகவும், பின்னர் யூதா ராஜ்யத்தின் தலைநகராகவும் விளங்கியது. சாலமோன் ராஜா இங்கே பிரசித்தி பெற்ற தேவாலயத்தைக் கட்டினார். யூதர்களும், கிறிஸ்தவர்களும் இந்நகரை ஒரு

புண்ணிய நகரமாகக் கருதுகின்றனர்.

**சமாரியா** : பிளவுபட்ட இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தின் வடபகுதியாகிய சமாரியா தேசத்தின் தலைநகர். இந்த நகரம் ஓம்ரி என்ற அரசனால் நிர்மாணிக்கப்பட்டது.

**பெத்லகேம்** : எப்பிராத்தா என்று மறு பெயரும் உண்டு. யாக்கோபின் முதல் மனைவியும், யோசேப்பு, பென்யமீன் என்பவர்களின் தாயாருமாகிய ராகேல் அடக்கம் பண்ணப்பட்ட இடம். தாவீது அரசனின் சொந்த ஊர். இயேசுவின் பிறப்பிடம்.

**நாசரேத்** : இயேசுவின் தாயாரும், அவள் கணவர் யோசேப்பும் வாழ்ந்த ஊர். இயேசு தம் இளமை பருவத்தில் இங்கே தான் வளர்ந்தார்.

**கப்பர்நகூம்** : தமது ஆண்டவருடைய கலிலேயா ஊழியத்தின் மையம். அங்கே அவருக்கு ஒரு இருப்பிடம் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

**எரிகோ** : பள்ளமான நகரம். கடல் மட்டத்துக்குக் கீழ் 800 அடி தாழ்வானது. உலகிலேயே பழமையான நகரம் என்று கருதப்படுகிறது.

**சீகார்** : யாக்கோப்பின் கிணறு இருந்த நகரம். இயேசு சமாரியா ஸ்திரியாகிய ஒரு விலைமாதை மனமாற்றி இரட்சிப்பின் பாதையில் வழி நடத்தினார்.

**செசரியா பிலிப்பி** : காற்பங்கு தேசாதிபதியாக இருந்த பிலிப்பு என்பவன் ரோமச் சக்கரவர்த்தி சீசரின் நினைவாக நிர்மாணித்த நகரம், இந்த நகரில்தான் பேதுரு இயேசுவை மேசியா என்று தெளிவாக அறிக்கை செய்தார்.

**பெத்தேல்** : லூஸ் என்பது இயற்பெயர். முற்பிதாக்களில் ஒருவராகிய யாக்கோபைத் தேவன் சந்தித்த இடம். யெரோபெயாம் என்னும் வட இராஜ்ஜியத்தின் முதல் அரசன் தமது குடிமக்கள் தொழுகைக்கு எருசலேம் தேவாலயத்துக்குப் போவதை தடுத்து நிறுத்த விக்கிரக ஆராதனைக்கு ஏற்பாடு செய்த இரண்டு நகரங்களில் ஒன்று.

**தாண்** : இயற்பெயர் லேசேம், பாலஸ்தீனா தேசத்தின் வடக்கு எல்லை.

**சீகேம்** : ஆபிரகாம் கானான் தேசத்துக்குள் கால் வைத்த முதல் இடம். எகிப்தின் ஆளுநராகப் புகழுடன் வாழ்ந்த யாக்கோப்பின் குமாரன் யோசேப்பு அடக்கம் பண்ணப்பட்ட இடம், யெரோபெயாம் தான் அரசனானதும் தன்னுடைய அரண்மனையை இங்கே கட்டிக் கொண்டான்.

**ஷீலோ** : உடன்படிக்கைப் பெட்டி வைத்திருந்த இடம், ஏலி, சாமுவேல் தீர்க்கதரிசிகள் வாழ்ந்த நகரம்.

# மல்கியா தீர்க்கனின் புத்தகம்

*பெயரின் பொருள்* : என்னுடைய தூதன்

*காலம்* : கி.மு. 444

*யாருக்கு?* : சிறையிருப்பில் மீந்தவர்களுக்கு

*பொருள்* : இஸ்ரவேல் ஆவிக்குரிய வாழ்வில் பலப்படுத்தப்பட வேண்டும்

*சிறப்பு* : கேள்வி - பதில் பாணியில் உள்ளது

*புறக்குறிப்பு* :

I உண்மையற்ற ஆசாரியர்கள் கண்டிக்கப்படுதல் 1 : 1-2:9

II விவாகரத்தும், புறஜாதிகளுடனான திருமணமும் கண்டிக்கப்படுதல். 2 : 10-16.

III மார்க்க வேற்றுமை கண்டிக்கப்படுதல். 2 : 17 - 4 : 6

## இது தரும் பாடங்கள்

1. விவாகரத்து யெகோவாவுக்கு அருவருப்பானது.
2. நேர்மையற்ற ஆராதனை தேவனை அவமானப்படுத்துகிறது.
3. எல்லா சத்தியத்தையும் அறிந்து, ஒரு பிரசங்கி பிரசங்கிக்காவிட்டால் ஜனங்கள் பாதிக்கப்படுவார்கள்.
4. மீதமிருப்பதை தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார்.
5. பிரசங்கியைப் போலவே, சபையுமிருக்கும்.
6. நமது ஆன்மீக வளர்ச்சியின் அளவுகோலாக, கர்த்தருக்குக் கொடுத்தல் இருக்கிறது.
7. பக்தியுள்ள சந்தோஷமான குடும்பத்தை தேவன் நேசிக்கிறார்.
8. கர்த்தருடைய நாள் மகிழ்ச்சியின் நாளாக இருக்கப்போகிறதா? அல்லது பயங்கரத்தின் நாளாக இருக்கப் போகிறதா என்பதை அவனவன் தனக்காக தீர்மானிக்க வேண்டும்.

வாலிபர் பகுதி

# மரணத்திலும் மகிமையைக் கண்டவன்

விடி வெள்ளி நட்சத்திரமாம் ஆண்டவர் இயேசுவின் ஈடு இணையற்ற நாமத்தில், வானத்து நட்சத்திரமாய் பிரகாசிக்கிற வாலிப உள்ளங்களுக்கு வாழ்த்துக்கள். வாழ்வில் மிக முக்கிய முடிவை எடுக்கும் பருவமாய் நம்முடைய மீதி வாழ்க்கைக்காக வித்திடும் விளைநிலமாய் சுலபமாக தவறுகளை தடையின், செய்ய வாய்ப்புள்ள நாட்களாய் வாலிபம் திகழ்கிறது. இந்த முக்கிய பகுதியில் தேவனின் குறைவற்ற வழியில் நீங்கள் நடக்க வேண்டும் என்பதே எனது மட்டில்லா ஆசை.

ஆடுகளை ஒழுங்காய் நடத்தியவனும், சிங்கத்தின் வாயிலிருந்து அவைகளை தன் வாலிபவயதில் காப்பாற்றியவனுமாகிய தாவீது தன் சங்கீத புத்தகத்தில் "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்?" என்ற ஒரு கேள்வியை கேட்டு, அதற்கு அவனே பதிலும் தருகிறான், "உமது வசனத்தின்படி தன்னை காத்துக் கொள்ளுகிறதினால் தானே" (சங்.19 : 9). அப்படி நீங்களும் காத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக உங்கள் முன்பாக, திரு வசனத்திற்காக ஜீவனை தந்த மரணத்தில் தேவ மகிமையை கண்ட ஸ்தேவானை நிறுத்துகிறேன்.

**அவன் விசுவாசம் நிறைந்தவனாய் இருந்தான் :**

ஸ்தேவானை வேதாகமம் அறிமுகப்படுகிறதை பாருங்கள் "ஸ்தேவான் விசுவாசத்தினாலும் . . . நிறைந்தவனாய்" என்று (அப். 6 : 8). இன்று தேவன் மீது விசுவாசம் இல்லாமல், மனித ஞானத்தை சார்ந்திருப்பதால் நாம் அநேக பிரச்சனைகளை சந்திக்கிறோம். நாம் தங்கத்தை விலை உயர்ந்ததாய் மதிக்கிறோம். ஆனால் அதற்கு முன்பு அது அது எரிகிற அக்கினியில் புடமிடப்படுகிறது என்பதை ஏனோ மறந்தே போகிறோம். நாமும் பொன்னைப் போல பிரகாசிக்க வேண்டுமானால், தேவன் நம்மை புடமிடும் வேளையில் நாம் விசுவாசத்தை இழந்தவர்களாகாமல், அதில் வேரூன்றி வளர வேண்டும்.

ஸ்தேவான் விசுவாசத்தில் நிறைந்தவனாய் இருந்தான். அவனால் எப்படி இந்த வளர்ச்சியை அடைந்திருக்க முடியும் என்ற வினா நம் உள்ளங்களில் தோன்றும். அது நியாயமானது தான். வேதம் கூறுகிறதை கேளுங்கள் "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய

வசனத்தினாலே வரும்" (ரோ. 10 : 17) என்கிறது. அப்படி என்றால் இந்த வாலிபன் வேத வசனத்தை ஆராய்ந்திருப்பான் என்பதில் ஐயமேயில்லை. சங்கீதக்காரன் கூறுகையில் "நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" (சங். 119 : 11). ஆகவே நாம் பாவஞ் செய்கிறோம் என்றால், அவரது வாக்கை நாம் இன்னும் நாம் இருதயத்தில் பதித்து, நம்மை பாக்கியவான்களாக மாற்றவில்லை என்றே அர்த்தமாகும். இப்படி தாவீது செய்ததால்தானோ, அவனை "என் இருதயத்திற்கு ஏற்றவன்" என்று தேவன் கூறினாரோ. (I.சாமு. 13 : 14).

இந்த உலகத்தின் பெருமைகளையும், இச்சைகளையும் ஜெயிக்கிற விசுவாசம் நிறைந்தவர்களாய் ஸ்தேவானைப் போல தேவனை மகிமைப்படுத்துவோம்.

ஸ்தேவான் வேத வாக்கியங்களில் தேறினவனாக இருந்தான்

கிறிஸ்துவுக்காய், தீவிரமாய் ஊழியம் செய்த ஸ்தேவான் மூர்க்கவெறி கொண்ட சில யூத மத மூப்பர்களால் ஆலோசனை சங்கத்தில் நிறுத்தப்பட்டான். இயேசு சந்தித்த அதே ஆலோசனை சங்கம், அதில் பரிசேயர், சதுசேயர் ஆகியோர் இருந்தனர். பரிசுத்த ஆவியானவர் லூக்காவை கொண்டு எழுதியிருப்பதை பாருங்கள் "ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும், அவன்மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவ தூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள். (அப். 6 : 16). இதை படிக்கும்போது தேவனிடத்தில் பேசியபோது மோசேயின் முகம் பிரகாசித்தது ஞாபகம் வருகிறது (யாத். 34 : 35).

ஸ்தேவான் அவர்களுக்குப் பதிலாய் பேசியதை, மிக நேர்த்தியாய் லூக்கா எழுதியுள்ளார். ஸ்தேவான் பழைய ஏற்பாடு முழுவதையும் ஒரு அதிகாரத்தில் பேசி முடித்தார் என்றால் மிகையாகாது. அவர் பேசிய போது யோசேப்பைப் பற்றி, கூறுகையில் அவர் எப்படி இஸ்ரவேலை ஜீவ இரட்சனை செய்தார் என்றும், இருப்பினும் அவருடைய சகோதரர்கள் எப்படி அவரை ஏற்றுகொள்ளவில்லை என்பதையும் கூறியுள்ளான். பின்பு மோசேயைப் பற்றிக் கூறுகையில் அவரையும் வானந்திரத்தில் இஸ்ரவேலர்கள் எப்படி எதிர்த்தார்கள் என்று விளக்கினான். பின்பு சாலொமோனை பற்றியும், தேவன் ஆலயத்தில் வாசம் செய்வதில்லை என்றும் எடுத்துரைத்தான்.

ஸ்தேவானுடைய வேதாகம அறிவை கவனித்தால், அது நம்மை வியக்க வைக்கிறது. அவர் மேற்கோள் காட்டியவர்கள் எல்லாரும் இஸ்ரவேலுடைய இரட்சிப்பில் (சரீர அல்லது ஆன்மீக) பங்கு உடையவர்கள்.

. . . உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். (I. பேது. 3 : 15) என்ற வசனத்திற்கு இவன் ஒரு நல்ல உதாரணம். நாமும் நம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு, பதில் கூற ஏதுவாய் ஸ்தேவானை போல் வேதத்தில் தேறினவர்களாக மாற தேவன் தாமே பெலன் தருவாராக.

**கிறிஸ்துவுக்காக மரணத்தை சந்திக்க தயாராக இருந்தான் :**

மரணம் என்கிற வார்த்தையைக் கேட்டாலே நம்மில் சிலருக்கு கொலை நடுங்குகிறது. ஸ்தேவானோ கிறிஸ்துக்காக மரிக்கவும் துணிந்தான், அவன் ஆலோசனை சங்கத்தாரிடம் பேசுகையில் நீங்கள் யாரை துன்பப்படுத்தாமலிருந்தீர்கள், நீங்கள் கொலை பாதகருமாயிருக்கிறீர்கள் (அப். 7 : 52) என்றான். அவன் பேசுவதை அறிந்தும் இருந்தான். இவர்கள் கொலை செய்யவும் துணிவார்கள் என்று நன்றாய் அறிந்தே பேசினான்.

ஜீவாதிபதியாகிய இயேசு கூறுகையில், "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து . . ." (லூக். 9 : 23) என்றார். அதை கொஞ்சமும் பிசகாமல் கடைபிடித்தான் என்றால் இயேசுவை அவன் எந்த அளவுக்கு நேசித்தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பவுலும் இப்படிதான் எருசலேமில் உயிருக்கு ஆபத்து என்று தீரு பட்டணத்தில் அகபு என்னும் யூதேயாவின் தீர்க்கனால் எச்சரிக்கப்பட்ட போது, கிறிஸ்துவுக்காக மரிக்கவும் தயார் என்று தன் விசுவாசத்தை உறுதிப்படுத்தினான். (அப். 21 : 13).

ஸ்தேவான் கிறிஸ்துவுக்காய் மரித்தான், கிறிஸ்துவை போல தன்னை கொலை செய்தவர்களுக்காக ஜெபித்தான், "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலி 2 : 5) என்ற வேத வசனத்திற்கு இவனே நற்சான்றாய் விளங்குகிறான். இதினால்தானே மரணத்திலும் இவன் தேவனுடைய மகிமையைக் கண்டு கொண்டான். நித்திய ஜீவனையும் பெற்றுக் கொண்டான்.

கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும் தரித்திரானதில்லை, வாலிபர்களே தைரியமாய், ஸ்தேவானை போல சத்தியத்திற்காக வாழுவோம்.

**ஜே. பிக்கின்ஸ்**

# கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்?

### ரோமர் 8 : 36 - 39

தேவன் அன்பாகவே இருக்கிறார் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் அன்பாகவே இருக்கிறார், அந்த அன்பை நம்மை விட்டுப் பிரிக்க யாராலும் முடியாது. புவல் அப்போஸ்தலன் தன் அனுபவத்தைக் கொண்டு இவ்வாறு ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார். உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோ, பட்டயமோ இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூறுகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும் அதிகாரங்களானாலும் வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வரும் காரியங்களானாலும், உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறோம்.

இந்த நிச்சயம் நமக்கு உண்டா? துன்பம் வரும் பொழுது கிறிஸ்துவின் அன்பை உதறி தள்ளி விடுகிறோமோ? உங்கள் ஜீவியம் இதற்கு பதில் அளிக்கும். நாம் கிறிஸ்துவின் வசனத்தை கைக் கொள்ளும்பொழுது அவருடைய அன்பு, நம்மில் பூரணராய் விளங்கும். அவருடைய கற்பனைகளையும், வசனத்தையும் கைக் கொள்ளாவிட்டால் கிறிஸ்துவின் அன்பை நாம் புறக்கணிக்கிறோம், நாம் கிறிஸ்துவின் அன்பை நம்மை விட்டு பிரித்து விடுகிறோம். பிரிவுக்கு காரணம் நம்முடைய கீழ்ப்படியாமையே. நாம் பாவம் செய்யும்பொழுது தேவ அன்பு நம்மை விட்டு பிரித்து விடுகிறது. ஏசாயா 59 : 2 ல் ஏசாயா சொல்லுகிறார், உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார் நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். எவ்வளவு பெரிய சிலாக்கியம் அவருடைய வசனத்தைக் கைக் கொள்ளும்பொழுது கிடைக்கிறது. இந்த சிலாக்கியத்தை நம் பாவத்தின் மூலம்

இழந்துவிடலாமா? கூடாதே. யோவான் 14 : 21 என் கற்பனைகளை பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான் நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் இதுவும் பெரிய ஆசீர்வாதமே.

நாம் தேவனிடத்தில் முன்பு அன்பு கூறவில்லை. தேவனே நம்மில் முன்பு அன்பு கூர்ந்தார். யோவான் 3 : 16 தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனையடையும் படிக்கு கிறிஸ்துவை தந்தருளினார் இவ்வளவாய் உலக மக்கள் மேல் அன்பு கூர்ந்தார். கிறிஸ்துவின் மூலம் பிதாவாகிய தேவனின் அன்பு நமக்கு அருளப்பட்டிருக்கிறது. நாம் செய்ய வேண்டியது என்ன? தேவனுடைய வசனத்துக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிவதாகும்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசி ஆபகூக் இவ்வாறு எழுதுகிறார். ஆபகூக் 3 : 17 அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்ச செடியில் பழம் உண்டாகமற் போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், இடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும் தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூறுவேன். இங்கே கூறியவைகள் நமக்கு ஏற்பட்டால் நாம் தேவனுடைய அன்பில் நிலைத்திருப்போமா அநேகருடைய கிறிஸ்துவின் மேலுள்ள அன்பு தணிந்துவிடுகிறது. நாளடைவில் பெரிய பிளவு ஏற்பட்டு விடுகிறது. கிறிஸ்துவின் மேலுள்ள அன்பை உலக ஆஸ்திகளோ குடும்பமோ பிரித்துவிடாது கவனமாய் விழிப்புடன் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்க வேண்டும்.

கிறிஸ்துவின் அன்பு மாறாதது. ஆகவே நாமும் கிறிஸ்துவின் அன்பை ஐசுவரியங்களுக்காக விட்டு விடக்கூடாது. எபி 12 : 25, 26 அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடு துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிஷங் களைப் பார்க்கிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியம் என்று எண்ணினான் தேவனுடைய தாசனாகிய மோசே! பணத்திற்காக கிறிஸ்துவின் அன்பை விற்று விடாதீர்கள்.

Bro. ஞானம். மலேசியா

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5

Posted at Erode HPO on 20, Jan 99

Jan 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு."சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER

TO

BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.